DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 133/2024 |
| Deposition of Witness for | : | P.W. 7 |
| Name | : | **மணிகண்டன்** |
| Father's Name | : | **கணேஷ்குமார்** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் 1வது எதிரி ஆஜர். 2-ம் எதிரி ஆஜர் இல்லை. இரண்டாம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 24.11.2025

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது கல்லல் கிராமத்தில் குடியிருந்து டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரி மணிகண்டனை தெரியும். 2வது எதிரி லட்சபாண்டியை தெரியும். அ.சா.1, 2, 4, 5 ஆகியோர்களை தெரியும். அ.சா.5 கிருஷ்ணவர்மனுக்கும் எதிரிகளுக்கும் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக முன் விரோதம் இருந்தது. அ.சா.5 கிருஷ்ணவர்மன் 1வது எதிரி மணிகண்டனுக்கு ரூ.25000/- கொடுத்ததாக என்னிடம் சொன்னார். கடந்த 08.06.2023ம் தேதி மேற்சொன்ன தொகையை கேட்பதற்காக இரவு 9.30 மணியளவில் மீனாட்சிபுரத்திலுள்ள 1வது எதிரி மணிகண்டனின் வீட்டிற்கு நானும் அ.சா.5 கிருஷ்ணவர்மன், செல்வமணி ஆகியோர்கள் சென்றோம்.

2. அங்கு சென்று மேற்படி தொகையை திரும்ப கேட்டபோது இருதரப்பிலும் வாக்குவாதம் ஏற்பட்டது. 1வது எதிரி மணிகண்டன் அவரது வீட்டு வாசலில் வைத்து அருவாளால் அ.சா.5 கிருஷ்ணவர்மனின் இடதுகை கட்டை விரலில் வெட்டியதால் விரல் துண்டானது. உடனே நானும் செல்வமணியும் அங்கிருந்து சென்றுவிட்டோம். அதன்பிறகு நடந்தது எனக்கு தெரியாது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழுங்கப்பட்டது.)**

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை** :

1. போலிசார் இவ்வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றும் விசாரணையின் போது நான், அ.சா.5 கிருஷ்ணவர்மன், லட்சபாண்டி ஆகியோர்கள் நண்பர்களாக பழகி வந்தோம் என்றால் சரிதான். அ.சா.5 கிருஷ்ணவர்மனுக்கும் லட்சபாண்டிக்கும் இருந்த பழக்க வழக்கத்தின் காரணமாக அ.சா.5 கிருஷ்ணவர்மன் என்ற கிட்டு என்பவர் லட்சபாண்டிக்கு ரூ.25000/- கடனாக கொடுத்துள்ளார் என்று நான் போலிசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் கிருஷ்ணவர்மன் அவ்வாறு என்னிடம் சொன்னார். அவ்வாறு கடன் கொடுத்த பணத்தில் பகுதியை கிருஷ்ணவர்மனுக்கு லட்சபாண்டி திருப்பி கொடுத்துவிட்டதாக நான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2. பாக்கி கடன் தொகையை இந்த சம்பவத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு கிருஷ்ணவர்மன் சென்று லட்சபாண்டியை கேட்டபோது அவர் தரமுடியாது என்று சொல்லிவிட்டதாக கிருஷ்ணவர்மன் என்னிடம் சொன்னார் என்று நான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 08.06.2023 ம் தேதியன்று கிருஷ்ணவர்மனுடன் நான், செல்வமணி ஆகிய மூவரும் கல்லலில் உள்ள லட்சபாண்டி வீட்டிற்கு மேற்படி பாக்கி கடன் தொகையை கேட்பதற்காக கிருஷ்ணவர்மன் அழைத்து சென்றார் என்று போலிசார்

விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

4. மூவரும் இரவு 9.30 மணிக்கு மீனாட்சிபுரத்தில் உள்ள லட்சபாண்டி வீட்டில் அவருடைய அக்கா மகன் மணிகண்டனும் லட்சபாண்டியும் இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பாக்கி கடன் தொகையை கேட்டபோது தான் வாக்குவாதம் ஏற்பட்டு மோதல் வந்தது என்றும் அந்த மோதலின் போது என்னுடன் வந்தவர்களை பார்த்து ஏன்டா தேவிடியா பசங்களா எங்கடா வந்து பணம் கேட்கிறிங்கா திருட்டு ரவுடி பசங்களா என ஆபாசமான வார்த்தைகளால் 1வது எதிரி மணிகண்டன் திட்டியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதன்பிறகு 1வது எதிரி மணிகண்டன் கீழே கிடந்த அருவாளை எடுத்து இத்தோடு செத்து தொலைடா என்று கிருஷ்ணவர்மன் தலையில் வெட்டியபோது கிருஷ்ணவர்மன் விலகியதால் அவருக்கு உச்சந்தலையில் அந்த அருவாள் பட்டு ரத்தக்காயம் ஏற்பட்டது என்றும் அவர் விலகாமல் இருந்திருந்தால் அருவாள்மனை ஆழமாக பதிந்து மண்டை பிளந்து உயிர்போயிருக்கும் என்று நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

5. ஆத்திரம் அடங்காமல் 1வது எதிரி மணிகண்டன் கிருஷ்ணவர்மனை மீண்டும் வெட்டினார் அதை கிருஷ்ணவர்மன் இடது கையால் தடுத்தபோது அவரது இடது கை கட்டைவிரலில் பட்டு பாதி அறுந்து தொங்கியது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 2 வது எதிரி லட்சபாண்டி கீழே கிடந்த கட்டையை எடுத்து கிருஷ்ணவர்மனை அடித்து வீக்காயத்தை ஏற்படத்தியதா சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அப்போது கிருஷ்ணவர்மன் அவரது பாதுகாப்பிற்காக லட்சபாண்டியை மரக்கட்டையால் அவரது இடது கை புஜம் மற்றும் இடது பக்க இடுப்பு ஆகிய இடங்களில் அடித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இச்சம்பவம் பற்றி போலிசார் விசாரணையில் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. புகார்தாரர் கிருஷ்ணவர்மன் எனக்கு என்ன உறவுமுறை என்றால் நீண்டகால நண்பர் ஆவார். எனக்கு சொந்த ஊர் என்ன என்றால் கல்லல். சம்பவத்திற்கு முன்னர் எதிரிகளை எனக்கு தெரியமா என்றால் தெரியாது. புகார்தாரர் கிருஷ்ணவர்மனும் எதிரிகளும் உறவினர்களோ நண்பர்களோ கிடையாது என்றால் சரிதான், ஆனால் இருவரும் பேசிக்கொள்வார்கள். புகார்தாரர் கிருஷ்ணவர்மனுக்கும் 2 வது எதிரிக்கும் கொடுக்கல் வாங்கல் பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளில் நான் எங்கு இருந்தேன் என்றால் கல்லலில் இருந்தேன்.

2. மீனாட்சிபுரத்திற்கு போவதற்கு தகவல் கொடுத்தது யார் என்றால் புகார்தாரர் கிருஷ்ணவர்மன். எத்தனை மணிக்கு தகவல் கொடுத்தார் என்றால் சரியாக நினைவில்லை சுமார் 6.30 மணி இருக்கும். யார் யார் சென்றோம் என்றால் நானும், செல்வமணி மற்றும் புகார்தாரர் கிருஷ்ணவர்மனும் சென்றோம். செல்வமணியின் ஊர் என்ன என்றால் புதுார். புதுாருக்கும் புகார்தாரர் கிருஷ்ணவர்மன் ஊருக்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் 10 கி.மீ இருக்கும். எதிரிகளின் ஊருக்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் நான் செல்வதற்கு முன்பே புகார்தாரர் கிருஷ்ணவர்மனும், செல்வமணியும் மீனாட்சிபுரத்தில் இருந்தார்கள் அதன்பின்னர் நான்சென்றேன். நான் செல்வதற்கு முன்பே சம்பவம் நடந்து முடிந்துவிட்டது என்றால் நான் சென்றபின்பு தான் சம்பவம் நடந்தது நான் மாலை சுமார் 6.30 மணிக்கு சம்பவயிடம் சென்றுவிட்டேன்.

3. நான் எதிரிகள் வீட்டிற்கு செல்வதற்கு முன்பே கூட்டம் கூடியிருந்ததா என்றால் சுமார் 10 பேர்கள் இருந்தார்கள். புகார்தாரர் கிருஷ்ணவர்மனுக்கு காயம் ஏற்பட்ட பின்பு அவரை யார் மருத்துவமனையில் சேர்த்தது என்றால் போலிசார் சேர்த்தார்கள். 108 ஆம்புலன்சிற்கு தகவல் கொடுத்தது யார் என்றால் போலிசார் சொன்னார்கள் நான் அந்த இடத்தில் அப்போது இல்லை சற்று தள்ளி இருந்தேன். புகார்தாரர் கிருஷ்ணவர்மனுடன் சென்ற நான் ஏன்

மருத்துவமனைக்கு அவருடன் செல்லவில்லை என்றால் சண்டை நடந்து கொண்டிருக்கும்போதே நாங்கள் இருவரும் சென்றுவிட்டோம். என்னை என்ன காரணத்திற்காக புகார்தாரர் கிருஷ்ணவர்மன் வரச்சொன்னார் என்றால் பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக அந்த பணத்தை வாங்குவதற்கு வரச்சொன்னார்.

4. புகார்தாரர் கிருஷ்ணவர்மனுக்கு எதிரிகள் வீட்டிற்கு இரவு நேரத்தில் போகக்ககூடாது என்று அறிவுரை நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும் புகார்தாரர் கிருஷ்ணவர்மனுக்கும் எந்த முன்பகையும் கிடையாது என்றும் புகார்தாரர் கிருஷ்ணவர்மன் எதிரிகளின் கிராமத்தில் ஆடுகளை திருட வந்தபோது கிராமத்து மக்கள் சேர்ந்து அவரை விரட்டும்போது இருசக்கரவாகனத்திலிருந்து கீழே விழுந்ததால் காயம் ஏற்பட்டது என்றும் பின்னீடு கிராம மக்கள் போலிசாருக்கு தகவல் தெரிவித்து புகார்தாரர் கிருஷ்ணவர்மனை மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றால் கிருஷ்ணவர்மன் ஆட்டை தூக்கிகொண்டு வந்து பின்னர் 2 வது எதிரி லட்சபாண்டி வீட்டிற்கு கொண்டு போய் விட்டுவிட்டார், காயம் ஊர்மக்கள் விரட்டிச் சென்றபோது ஏற்படவில்லை. உண்மையிலேயே கிருஷ்ணவர்மன் ஆட்டை திருடியதால் தான் அவருக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

5. சம்பவம் நடந்த எத்தனை நாட்கள் கழிந்த பிறகு புகார்தாரர் கிருஷ்ணவர்மனை பார்த்தேன் என்றால் சுமார் 1 மாதம் கழித்து தான் பார்த்தேன். அதற்கு இடைப்பட்ட காலத்தில் நான் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. வழக்கு சம்மந்தமாக போலிசார் எங்கு எப்போது வைத்து விசாரித்தார்கள் என்றால் காளையார்கோவில் போலிசார் இந்த சம்பவ்ம தொடர்பாக என்னை கைது செய்தபோது விசாரித்தார்கள். செல்வமணி, நான் மற்றும் புகார்தாரர் கிருஷ்ணவர்மன் மேல் வழக்கு போடப்பட்டிருந்தது என்றால் சரிதான். நான்சொன்னது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் புகார்தாரர் கிருஷ்ணவர்மன் எனது நண்பர் என்ற

காரணத்தால் அவர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.11.24 14:53:21 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர்**

**சிவகங்கை.**